# இந்திய ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் தேசவிரோதிகள் யார்?


## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... 2ஆம் பக்கத் தொடர்ச்சி

**இரண்டு இயக்கங்களும் செயல்பட்டன. 1952 ஆகஸ்ட் முதல் தேதி அன்று திருச்சி ரயில்வே சந்திப்பின் ஒரு பகுதியில் இருந்த பெயர்ப்பலகையில் இந்தி எழுத்துகளைத் தந்தை பெரியார் அழிக்க, மற்றொரு பகுதியில் இருந்த பெயர்ப் பலகையில் முத்தமிழறிஞர் கலைஞரும் அவருடன் ஊர்வலமாக வந்த தி.மு.கழகத்தினரும் இந்தி எழுத்துகளை அழித்தனர். இத்தகைய தொடர் போராட்டங்களுக்குப் பிறகே, ரயில் நிலைய பெயர்ப் பலகைகளில் முதலிடத்தில் இருந்த இந்தி எழுத்துகளுக்குப் பதிலாக, தமிழ் முதலிடம் பிடித்தது.**


> **இந்திய ஒன்றியத்தின் பன்முகத் தன்மையையும் மொழிவழிப் பண்பாடுகளையும் குலைப்பவர்கள் தான் உண்மையான தேசவிரோதிகள்.**

அந்தந்த மாநில ரயில் நிலையங்களிலும் அவரவர் தாய்மொழி முதன்மையாகவும், இந்தி எழுத்துகள் அடுத்ததாகவும், ஆங்கிலம் மூன்றாவதாகவும் இருக்கிறதென்றால் அதற்கு திராவிட இயக்கம் முன்னெடுத்த மொழிப் போராட்டமே காரணமாகும். தமிழை மட்டுமல்ல, இந்தி ஆதிக்கத்திடமிருந்து மற்ற மாநிலத்தவர்களின் தாய்மொழியையும் காப்பதற்கு திராவிட இயக்கத்தின் உறுதியான இந்தி ஆதிக்க எதிர்ப்புணர்வே முதன்மையாக உள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின், 15 ஆண்டுகளில் இந்தியை மட்டுமே ஆட்சிமொழியாக நிறுவுவதற்கான சட்டப்பிரிவுகளை முன்வைத்து, அதற்கான நடவடிக்கைகளை அன்றைய ஒன்றிய அரசு முயன்றபோது, 1957ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தேர்தல் களம் கண்டு,


ஓமந்தூரார்


டி.டி.கிருஷ்ணமாச்சாரியார்


ஈ.வெ.கி. சம்பத்

இரண்டு உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்தில் நுழைந்தது திராவிட முன்னேற்றக் கழகம். நம் இயக்கத்தின் மக்களவை உறுப்பினர்களான திருவண்ணாமலை தருமலிங்கமும், சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத்தும், பிரதமர் நேரு இருந்த அவையில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து முழங்கினர்.

> **தி.மு.க ஒரு போராட்டத்தைக் கையில் எடுத்தால் இந்தி-யாவை ஆட்சி செய்பவர்கள் அஞ்சுகிறார்கள்–அலறுகிறார்கள்.**

“இந்தியா என்பது ஒற்றை நாடல்ல, இது ஒரு துணைக் கண்டம். பல மொழிகளைப் பேசும் தேசிய இனங்களைக் கொண்ட நிலப்பரப்பு” என்பதை ஒட்டுமொத்த மக்களும் உணர்ந்துகொள்ளும் வகையில் நாடாளுமன்றத்தில் முதன்முதலில் உரக்க முழங்கிய இயக்கம் நம் தி.மு. கழகம். அதன் விளைவாகத்தான், **“இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடிக்கும்”** என்ற உறுதிமொழியை பிரதமர் நேரு வழங்கினார். தென்னிந்திய மாநிலங்கள் மட்டுமின்றி, அசாம், மேற்குவங்கம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் ஆட்சிமொழி என்ற பெயரில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் எழுப்பினர். பிரதமர் நேரு, தனது உறுதி மொழி மீறப்படாது எனக் கடிதம் வாயிலாக உறுதி செய்தார்.

தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.வெ.கி.சம்பத் அவர்களுக்கு 1960ஆம் ஆண்டு பிரதமர் நேரு உத்தரவாதம் அளித்து எழுதிய கடிதத்தை, சென்னை கடற்கரையில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் இலட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்களின் முன் வெளியிட்ட பேரறிஞர் அண்ணா,

> **நமது தொடர் போராட்டங்களுக்குப் பிறகே, ரயில் நிலைய பெயர்ப் பலகைகளில் முதலிடத்தில் இருந்த இந்தி எழுத்துகளுக்குப் பதிலாக, தமிழ் முதலிடம் பிடித்தது.**

**“என் தம்பிக்கு வாக்குறுதியை வரைந்துள்ள இந்தக் கரம், (அமெரிக்க ஜனாதிபதி) ஐசனோவரோடு கை குலுக்கிய கரம், ட்ரூமனோடு கைகுலுக்கிய கரம், (எகிப்து) நாசரோடு கைகுலுக்கிய கரம். இந்தக் கரம்தான் என் தம்பிக்கு கையெழுத்திட்டு வாக்குறுதியை வழங்கியுள்ளது”** என நேருவின் வாக்குறுதியைக் குறிப்பிட்டார்.

கடற்கரையில் முழங்கிய அண்ணா 1962ஆம் ஆண்டு இந்தியநாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகி ஆற்றிய முதல் உரையே ஒட்டுமொத்த அவையையும் கட்டிப் போட்டது. ‘I belong to the Dravidian Stock’ என்ற அவரது புகழ்பெற்ற உரை, மாநில மொழிகள் மீதான பிரதமர் நேரு உள்ளிட்ட ஆட்சியாளர்களின் பார்வையில் புதிய திருப்பத்தை உருவாக்கியது. 1963ஆம் ஆண்டு மே மாதம், **‘இந்தி அச்சுறுத்தலை எதிர்ப்போம்’** என்று மாநிலங்களவையில் அண்ணா ஆற்றிய உரை, இந்தியை ஆட்சிமொழியாக்குவதால் இந்தியாவின் பிற மொழிகள் எப்படியெல்லாம் பாதிக்கப்படும் என்பதை தன் அழுத்தமான வாதங்களால் முன்வைத்தார்.

> **இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடிக்கும் என்ற உறுதிமொழியை பிரதமர் நேரு வழங்கினார்.**

அந்நிய மொழியான ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளும்போது, இந்திய மொழியான இந்தியை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று ‘அறிவு ததும்பி வழியும்’ இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களும் அவர்களின் கட்சியினரும் கேட்கிறார்கள். ஆங்கிலம் எல்லா மாநிலங்களுக்கும் அந்நிய மொழி. ஆனால், இந்தி சில மாநிலங்களுக்கு மட்டும் தாய்மொழி. தமிழ்நாடு உள்ளிட்ட மற்ற மாநிலங்கள் அனைத்திற்குமே அது அந்நிய மொழி.

இதனை நாடாளுமன்ற மாநிலங்களவையில் மிகத் தெளிவாக விளக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், **“இந்தி பேசும் மாநிலங்களின் மக்களுக்கு அதுவே தாய்மொழியாக இருக்கும். அதுவே அரசு மொழியாகவும் இருக்கும். அதுவே பயிற்று மொழியாகவும் இருக்கும். அதுவே மத்திய அரசின் மொழியாகவும் இருக்கும். இந்தி பேசும் மக்களுக்கு இவ்வளவு வாய்ப்புகள், உரிமைகளை வழங்கிவிட்டு, இந்தி பேசாத (மற்றமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட) எம் போன்ற மக்களுக்கு எவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்துகிறீர்கள்?”** என்று கேட்டார்.

> **சமஸ்கிருதத்திற்குப் பதில் தமிழிலேயே கோவில்களில் அர்ச்சனை செய்யலாமா? தமிழும் செம்மையான மொழிதானே?’’ என்று அவர்களைப் பார்த்துக் கேளுங்கள்!**

அன்று அண்ணா கேட்டதைத்தான் நாமும் கேட்கிறோம். அண்ணா உருவாக்கிய இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டில் நீடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். ‘காலம் மாறிவிட்டது அதனால் இந்தியைத் திணிப்போம்’ என்கிறார்கள் இன எதிரிகள். **எத்தனை காலங்கள் மாறினாலும் அதற்கு ஈடுகொடுத்து நிற்கும் செம்மொழியாம் தமிழ் மீது இந்தி-சமஸ்கிருத ஆதிக்கத்திற்கு இடம் கொடுக்க மாட்டோம். உயிரைக் கொடுத்தேனும் தமிழைக் காப்போம்!**

**(தொடரும்)**

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 15
27.02.2025.

---

ஒன்றிய அரசு செய்யும் துரோகம் குறித்து தென்னிந்திய அளவில் -

# அனைத்துக் கட்சிகளையும் முதல்வர் ஒருங்கிணைப்பார்!

## புதுக்கோட்டையில் - அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

*புதுக்கோட்டை, மார்ச் 1-*

*புதுக்கோட்டையில் பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:*

*தமிழ்நாட்டில் தொகுதி மறுசீரமைப்பு குறித்து ஒன்றிய அரசு தமிழ் நாட்டிற்கு செய்யும் துரோகம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திவிட்டு அதன் பிறகு தென்னிந்திய அளவில் அனைத்து கட்சியையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் முதல்வர் ஈடுபடுவார்.*

*மக்கள் தொகை கணக்கெடுப்போடு சாதி வாரி கணக்கெடுப்பையும் எடுக்க தி.மு.க. வலியுறுத்தும்.*

*பிரதமர் 2023 ஆம் ஆண்டு தொகுதி மறுசீரமைப்பின் போது தென்னிந்தியாவில் 100 தொகுதிகள் காணாமல் போகும் என்று கூறியுள்ளார். அமித்ஷாவும் நாடாளுமன்றத்தில் இதுகுறித்து பேசியுள்ளார் அதனால் தான் நாங்கள் அச்சப்படுகிறோம்.*

*அரசியல் சாசன 83ன் படி , மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பின்பு, நாடாளுமன்ற தொகுதிகள் மறுவரையறை செய்ய வேண்டும்,*

*1961 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் 522 தொகுதிகளும், 1971 ஆம் ஆண்டு 10.1 லட்சம் மக்களுக்கு ஒரு எம்.பி தொகுதி என 543 சட்டமன்ற தொகுதிகள் கொண்டு வரப்பட்டன.*

*அதன் பின் தென்னிந்திய மாநிலங்கள் குடும்ப கட்டுபாடு சிறப்பாக நடைமுறைப்படுத்தியதால் அதே கணக்கெடுப்பின் படி எம்.பி.தொகுதிகள் வரையறுக்கபட்டன,*

*2026 ஆம் ஆண்டு வரை தான் இந்த சட்டம் செல்லும், அடுத்த 25 ஆண்டுகளுக்கு இதே முறை தான் நடைமுறைபடுத்தப்படுமா..? அல்லது மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி புதிய தொகுதிகள் வரையறுக்கப்படுமா என்பதை மத்திய அரசு தெரியபடுத்த வேண்டும்.*



*1971 ன்படி 23.74 என்ற தென் மாநில பிரதிநிதித்துவம் தொடர்ந்தால் தென் மாநிலங்களுக்கு இருக்கும் மக்கள் தொகை கணக்கெடுத்தால் தென் மாநில பிரதிநிதித்துவம்*

*18.97 ஆக குறையும்*

*848 தொகுதிகளாக வரையறுத்தால் தென் மாநில பிரதிநிதித்துவம்*

*19.34 ஆக இருக்கும்.*

*10 மாநிலங்களில் கவனம் செலுத்தினால் மட்டுமே பாஜக ஆட்சி வந்து விடும், 26 மாநிலங்களில் 0 வாங்கினாலும் அவர்களுக்கு வருமுன் தடுப்போம் என்பதை போல் முதலமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.*

*குடும்ப கட்டுபாட்டை செயல்படுத்தியதற்காக எங்களுக்கு தண்டனை வேண்டாம் பரிசு தான் வேண்டும் தொகுதி மறு சீரமைப்பு நடக்கும் போது கண்டிப்பாக புதுக்கோட்டை நாடாளுமன்ற தொகுதி 39 தொகுதிக்குள் வரப்படும்.*

*பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக நாங்கள் ஏற்கனவே டெல்டா மாவட்டங்களை அறிவித்துள்ளோம். அங்கு ஹைட்ரோ கார்பனுக்கு இடம் இல்லை ஆழ்கடல் பகுதியில் மத்திய அரசு ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கு அனுமதி மறுத்துள்ளது. இது குறித்து முதல்வர் முடிவெடுப்பார்*

*சீமான் வழக்கு குறித்து வழக்கு விசாரணையில் இருப்பதால் நீதிமன்றம் உரிய முடிவு எடுக்கும்.*

*சம்மன் கொடுத்து ஆஜராகவில்லை என்றால் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து நீதிமன்றமும் காவல்துறையும் முடிவெடுக்கும்.*

*இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.*



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாளவிடுதி அரசு விதைப் பண்ணையில் நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 27.02.2025 அன்று கந்தர்வக்கோட்டை வட்டம், சங்கம்விடுதி வருவாய் கிராமம், குருவாண்டான் தெருவைச் சேர்ந்த உயிரிழந்தவரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவித் தொகைக்கான காசோலையினை வாரிசுதாரரிடம் வழங்கினார். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், இணை இயக்குநர் (வேளாண்மை) திருமதி.மு.சங்கரலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




திருச்சியில் இந்தியை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மாணவரணி,தமிழ்நாடு மாணவர் இயக்க கூட்டம் சார்பில் பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு மத்திய மற்றும் வடக்கு மாவட்டம் சார்பில் மாநில மாணவரணி துணை அமைப்பாளர் பி.எம்.ஆனந்த் தலைமையில் இந்தியை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர்கள் வைரமணி,மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், சேர்மன் துரைராஜ் காஜாமலை விஜி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஈஞ்சூர் சதீஷ், மாணவர் அணி துணை அமைப்பாளர் அப்துல் காதர், பகுதிச் செயலாளர்கள் கமல் முஸ்தபா ராம்குமார் மோகன்தாஸ் கனகராஜ் கோட்டத் தலைவர் துர்கா தேவி, கலைச்செல்வி, கிராப்பட்டி செல்வம் குன்னம் தொகுதி தேர்தல் பார்வையாளர் அருண் தலைமைக் கழக பேச்சாளர் கருணாமூர்த்தி சிங்காரம், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ம தனா, கருப்பையா பீம நகர் சதீஷ் பாலமுருகன் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.